சிறுபான்மை மக்களுக்கு அரணாக தி.மு.க. இருக்கும்: கிறிஸ்துமஸ் விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, டிச.24

சிறுபான்மை மக்களுக்கு காவல் அரணாக தி.மு.க. தொடர்ந்து இருக்கும் என்று சென்னையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் விழா சென்னை பெரம்பூர் டான் போஸ்கோ பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவுக்கு தி.மு.க. தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கி பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் மற்றும் பொதுமக்கள் 2,500 பேருக்கு கிறிஸ்துமஸ் பரிசு வழங்கினார்.

விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

சிறுபான்மை மக்களுக்கு துரோகம் செய்துவிட்டு, வாக்கு அரசியலுக்காக சிறுபான்மை மக்களின் நண்பர்கள் போன்று நடிப்பவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை சமூக மக்களிடம், பெரும்பான்மையில் சிலர் விதைக்கும் வெறுப்பு அரசியலுக்கு அஞ்சக்கூடாது.

சிறுபான்மை மக்கள் நலன் மீது உண்மையான அக்கறை கொண்டுள்ள இயக்கம் தி.மு.க.தான். இந்த விழாவில் பேராயர்களுடன், பேரூர் ஆதினம் கலந்து கொண்டிருக்கிறார். விழாவை நடத்துவது இந்து சமய அறநிலைய துறை அமைச்சர் சேகர்பாபு. இதுதான் சமத்துவ விழா.

சமத்துவத்தை போற்றுவதும், பாதுகாப்பதும்தான் திராவிட மாடல். திராவிட மாடல் என்றால் என்ன என்று கேட்பவர்கள், இதுதான் திராவிட மாடல் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியா என்ற பன்முக தன்மை கொண்ட நம்முடைய அழகிய நாட்டில், எல்லோரும் சமத்துவத்துடனும், ஒற்றுமையுடனும் இருக்க வேண்டும். இதற்கு தடையாக, மதத்தை அரசியலுக்கு பயன்படுத்தி, மக்களின் உணர்வுகளை தூண்டி, பிடிவாத அரசியல் செயல்பவர்களுக்குதான் நாங்கள் எதிரி. மற்றபடி இறைவழிபாடு என்பது அவரவர் உரிமை.

மத்திய பா.ஜ.க. அரசு, சிறுபான்மை மக்களுக்கு, அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் அரசாக நடந்து வருகிறது. சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை காக்கும் காவல் அரணாக தி.மு.க. தொடர்ந்து செயல்படும் என்று உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் குடியுரிமை திருத்தச்சட்டத்துக்கு எதிராக வலிமையுடன் தொடர்ந்து போராட்டங்களை நடத்தியது தி.மு.க.தான். ஆனால், நாடாளுமன்றத்தில் அந்த சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது அண்ணா தி.மு.க. மத்திய அரசு மதச்சார்பின்மை என்ற சொல்லை, அரசியல் அமைப்பு சட்டத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று துடித்துக்கொண்டிருக்கிறது. அதனால்தான், நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வுக்கு மக்கள் பெரும்பான்மை பலத்தை அளிக்கவில்லை. இருந்தாலும், அவர்கள் இன்னும் திருந்தவில்லை. நாடு, நல்லவர்கள் கையில் பாதுகாப்பாக இருக்கும், அனைத்து மக்களும் ஒற்றுமையுடன், சமத்துவத்துடன் வாழும் நாள் நிச்சயம் விடியும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேக் வெட்டி அதனை, தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய தலைவரான பாதிரியார் ஜோ அருண், முன்னாள் நீதிபதி அக்பர் அலி, கிறிஸ்தவ நல்லெண்ண இயக்க தலைவர் இனிக்கோ இருதயராஜ் உள்ளிட்டோருக்கு தனது கையால் ஊட்டி விட்டார்.

முன்னதாக, விழாவுக்கு வருகை தந்த மு.க.ஸ்டாலினை, கிறிஸ்துமஸ் தாத்தா போல் வேடமணிந்து வந்த குழந்தைகள், பூக்களை கொடுத்து வரவேற்றனர்.

தி.மு.க. சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் சுபேர்கான் வரவேற்று பேசினார். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு நன்றி கூறினார்.

விழாவில் அமைச்சர்கள் ஆவடி நாசர், கோவி.செழியன், மேயர் பிரியா, சி.எஸ்.ஐ. பேராயர் சர்மா நித்தியானந்தம், இந்திய சுவிசேஷ திருச்சபை பேராயர் கதிரொளி மாணிக்கம், பேரூர் ஆதினம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

கபாலீஸ்வரர் கலை, அறிவியல் கல்லூரிக்கு ரூ.25 கோடியில் புதிய கட்டிடம்: ஸ்டாலின் அடிக்கல்

சென்னை, டிச.24–

சென்னை கொளத்தூர் கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.25 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ள புதிய கட்டிடத்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

சென்னை கொளத்தூர் கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கடந்த 2021ம் ஆண்டு தொடங்கப்பட்டது. கல்லூரி தொடங்கப்பட்டது முதல் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்த கல்லூரிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு கொளத்தூரில் சோமநாதசாமி கோவிலுக்கு சொந்தமான இடம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறைக்கு நில மாற்றம் செய்யப்பட்ட இடம் என மொத்தம் 5.96 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த இடத்தில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக தரை தளம் மற்றும் 4 மாடிகளுடன் 20 வகுப்பறைகள், முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் அறை, அலுவலகம், ஆய்வகங்கள், கணினி அறை, கருத்தரங்கு கூடங்கள், நூலகம், உணவகம், கழிவறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கல்லூரிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

புதிய கட்டிட பணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டி கட்டுமான பணியை தொடங்கி வைத்தார். கட்டிடத்தின் வடிவமைப்பினை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சேகர்பாபு, கோவி. செழியன், மேயர் பிரியா, இந்து அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

டிரைவர் இல்லாத 70 மெட்ரோ ரெயில்களை தயாரிக்க ரூ.3,657 கோடியில் ஒப்பந்தம் கையெழுத்தானது

சென்னை, டிச.24–

சென்னையில் 2ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டம் ரூ.63 ஆயிரத்து 246 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதவரம் பால் பண்ணை – சிறுசேரி சிப்காட், கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி பணிமனை, மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையே மொத்தம் 116.1 கிலோ மீட்டர் தொலைவுக்கு 3 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் கட்டுமான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. 2027ம் ஆண்டுக்குள் மெட்ரோ ரெயில் திட்டப் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. டிரைவர் இல்லாத மெட்ரோ ரெயில் பயன்படுத்தப்பட இருக்கிறது. முதல்கட்டமாக 36 ரெயில்கள் ஆந்திர மாநிலம் ஸ்ரீசிட்டியில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில், முதல் டிரைவர் இல்லாத மெட்ரோ ரெயில் தயாரிப்பு பணி முடிந்து கடந்த அக்டோபர் மாதம் சென்னை வந்தது. கூடுதலாக டிரைவர் இல்லாத 70 மெட்ரோ ரெயில்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் பி.இ.எம்.எல். என்ற நிறுவனத்துக்கு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வழங்கியுள்ளது. சென்னை நந்தனத்தில் உள்ள மெட்ரோ ரெயில் தலைமை அலுவலகத்தில் இதற்கான நிகழ்ச்சி நேற்று நடந்தது. அப்போது ரூ.3 ஆயிரத்து 657 கோடி மதிப்பீட்டில் டிரைவர் இல்லாத 70 மெட்ரோ ரெயில்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் பி.இ.எம்.எல். நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் எம்.ஏ.சித்திக் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. வடிவமைப்பு, சோதனை, பணியாளர்களுக்கான பயிற்சி, பணிமனை எந்திரங்களுக்கு 15 ஆண்டுகள் முழுமையான பராமரிப்பு ஆகியவை இந்த ஒப்பந்தத்தில் அடங்கும். இதன்படி முதல் மெட்ரோ ரெயில் 2026ம் ஆண்டு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். பின்னர், மீதமுள்ள அனைத்து மெட்ரோ ரெயில்களும் 2027ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2029ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை ஒவ்வொரு கட்டமாக ஒப்படைக்கப்படும் என சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
(முன்னர் இன்டோஸ்டார் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட், இனி NHFPL என குறிப்பிடப்படும்)
பதிவு அலுவலகம் : யூனிட் எண்.305, 3வது தளம், விங் 2/E, கார்ப்பரேட் அவென்யூ, அந்தேரி கட்கோபர் லிங்க் சாலை, சக்லா, அந்தேரி (கிழக்கு), மும்பை 400 093.

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு

நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு வீட்டுக் கடன்/ அடமானக் கடன்/ கட்டுமானக் கடனை வீட்டு மனைகளை அடமானம் வைத்து அனுமதித்துள்ளது. தேசிய வீட்டுவசதி வங்கி/ஆர்பிஐயின் வழிகாட்டுதல்கள் மற்றும் விதிகளின்படி கூறப்பட்ட கடன்களின் தொகையை ஒழுங்காக திருப்பிச் செலுத்தாத காரணத்தால் அவை இறுதியாக செயல்படாத சொத்துகளாக வகைப்படுத்தப்படுகின்றன.
நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் அதன் உரிமைகளைப் பயன்படுத்தி மற்றும் SARFAESI சட்டம், 2002ன் பிரிவு 13(2)ன் கீழ் இந்த அறிவிப்பை வெளியிட்டு, அந்தந்த கடன்தாரர்களுக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த நிலுவைத் தொகையை கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பின்வரும் கடன்தாரர்கள் தங்களுக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த நிலுவைத் தொகையையும் மேலும் கட்டணங்கள் மற்றும் வட்டியையும் சேர்த்து, கோரிக்கை அறிவிப்பின் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்தும் நாள் வரையிலான மொத்த தொகையையும் செலுத்துமாறு இந்த அறிவிப்பின் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில் NHFPL ஆனது சொத்துக்களை உடைமையாக்க, அப்புறப்படுத்த/ விற்பனை மற்றும் நிலுவைத் தொகைக்கு எதிராக வருமானத்தை சரிசெய்வதற்கு அனைத்து அல்லது ஏதேனும் சட்ட உரிமைகளை எடுக்கும். சொத்துக்களில், கடன்தாரர்கள், மூன்றாம் தரப்பு ஆர்வத்தை உருவாக்கக் கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வ. எண்.	இடம்/ கடன் கணக்கு எண்	கடன்தாரர்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	சொத்து விவரங்கள்
1	வேலூர் LNVELLAP 12200015211	முனிசாமி சின்னசாமி (கடன்தாரர்), கோகிலவாணி முனிசாமி (உடன் கடன்தாரர்), ராஜேஷ் முனிசாமி (உடன் கடன்தாரர்)	13 டிசம்பர் 2024	ரூ.290978/- (ரூபாய் இரண்டு லட்சத்து தொண்ணூறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தெட்டு மட்டும்)	சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். கிராம நத்தம் சர்வே எண்.119/215, செம்பேடு கிராமம், குடியாத்தம் சார் பதிவு அலுவலகம், தாலுகா & வேலூர் மாவட்டம் 635813. நான்கு எல்லைகள் : கிழக்கு : வாடிக்கையாளர் மனை, மேற்கு : சின்னசாமிசாமியின் மனை எண். 214, வடக்கு : எஸ்.எண். 211 & சாலை, தெற்கு: முனிரத்னம் ஜகதாவுக்கு சொந்தமான மனை எண். 217.
2	சென்னை காஞ்சிபுரம் LNCHNOHL 01230028246	வஜ்ரவேலு மாசி (கடன்தாரர்), மணிமேகலை வஜ்ரவேலு (உடன் கடன்தாரர்)	13 டிசம்பர் 2024	ரூ.704538/- (ரூபாய் ஏழு லட்சத்து நாலாயிரத்து ஐந்நூற்று முப்பத்தெட்டு மட்டும்)	சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எஸ். எண். 49/3, பட்டா எண். 598ன் படி, புதிய எஸ். எண். 49/3a, புல்லலூர் கிராமம் - a, காஞ்சிபுரம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். விஸ்தீரணம் மொத்த பரப்பளவு 0.39 சென்ட் நிலத்தில் 0.10 சென்ட் (4355.6 சதுர அடி). இந்த சொத்தானது காஞ்சிபுரம் இணை II சார் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. அதன் எல்லைகள் மற்றும் விஸ்தீரணம் விவரம் வருமாறு, எல்லைகள் : பொதுவான வழி, மேற்கு; பெரியசாமிக்கு சொந்தமான நிலம் 4355.6 சதுர அடி (0.10 சென்ட்), வடக்கு : பொன்னன் நிலம், தெற்கு: மீதி நிலம்.

இடம்: வேலூர், காஞ்சிபுரம்
தேதி: 24.12.2024

ஒப்பம்/– **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

NAME CHANGE

OLD NAME : RAJESH M SONIGARA
S/O : MADANRAJ
DATE OF BIRTH : 13/01/1974
ADDRESS : 38, PONNAPPA CHETTY STREET, Dharmesh Kunj, 3rd Floor CHENNAI-600 003 TAMILNADU, INDIA
SHALL HENCEFORTH BE KNOWN AS **RAJESH SONIGARA**

NAME CHANGE

OLD NAME : KAVITA R SONIGARA
W/O : RAJESH SONIGARA
DATE OF BIRTH : 05/03/1976
ADDRESS : 38, PONNAPPA CHETTY STREET, Dharmesh Kunj, 3rd Floor CHENNAI-600 003 TAMILNADU, INDIA
SHALL HENCEFORTH BE KNOWN AS **KAVITA SONIGARA**

U GRO CAPITAL LIMITED
4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், எல்பிஎஸ் சாலை, குர்லா, மும்பை 400070

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 (''சட்டம்'') மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் (''விதிகள்'')கீழ்

யு குரோ கேபிடல் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான கீழே கையொப்பமிட்டவர் சட்டப்பிரிவு 13(2) மற்றும் விதி 3ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டப் பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பி, அந்தந்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு பின்வரும் கடன்தாரர்களை கேட்டுக் கொண்டார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பின் சேவையைத் தவிர்க்கிறார்கள் என்று கீழ்க்கையொப்பமிடப்பட்டவர் நம்புகிறார், எனவே விதிகளின்படி கோரிக்கை அறிவிப்பினை ஒட்டுதல் மற்றும் வெளியீடு மூலம் செயல்படுத்தப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்) பெயர்/கடன்(கள்) விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை
1. சன் பேக்கேஜிங் கம்பெனி, 2. மாணிக்கம் முருகவேள், வெங்கட்ராம் கணேஷ் கடன் கணக்கு எண்கள்: HCFCHESEC00001010149 HCFCHEMLN00001002464	நோட்டீஸ் தேதி : 14.02.2024 மற்றும் 07.05.2024 அன்று தொகை ரூ.39,50,058/– (ரூபாய் முப்பத்தொன்பது லட்சத்து ஐம்பதாயிரத்து ஐம்பத்தெட்டு மட்டும்)

ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் : தயாரிப்பு : லோட்டஸ் மெக்கானிக்கல் பிரைவேட் லிமிடெட், மாடல் : 9 கலர் ரோடோ கிராவூர் பிரிண்டிங் மெஷின் மற்றும் அனைத்து உதிரிபாகங்களுடன். வரி ரசீது : 2021/22-028

கோரிக்கை அறிவிப்புகளுக்கு இணங்கி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைத் தொகையை, இந்த வெளியீடு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள், பணம் செலுத்தப்படும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி, தாமதமாக செலுத்தும் அபராதம், பவுன்ஸ் கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றுடன் செலுத்துமாறு கடன்தாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். யு குரோ கேபிடல் லிமிடெட் ஒரு பாதுகாப்பான கடனாளர் என்பதையும், கடன்தாரர்களால் பெறப்படும் கடன் வசதி என்பது யு குரோ கேபிடல் லிமிடெட்டில் கடன்தாரரால் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் என்பதையும் கடன்தாரர்(கள்) கவனித்தில் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கடன்தாரர்கள் தங்கள் பொறுப்புகளை முழுமையாகச் செலுத்தத் தவறினால், கடன்தாரர்களின் கடன் கணக்கில் நிலுவைத் தொகையை பெறுவதற்காக, சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின் கீழ் கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் தீர்வாக விற்பனை செய்வதன் மூலம் அல்லது மாற்றுவது உட்பட பாதுகாக்கப்பட்ட சொத்தை கவாதீனம் செய்ய சட்டப் பிரிவு 13(4)ன் கீழ் அனைத்து உரிமைகளையும் பயன்படுத்த யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உண்டு. விற்பனை அல்லது பரிமாற்ற உரிமையைச் செயல்படுத்துவதற்கு முன், பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை இணைக்க மற்றும்/அல்லது சீல் செய்ய யு குரோ கேபிடல் லிமிடெட் அதிகாரம் பெற்றுள்ளது. பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் விற்பனைக்குப் பிறகு, யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை ஈடுகட்ட, பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு போதுமானதாக இல்லாவிட்டால், மீதி பாக்கி தொகையை மீட்டெடுப்பதற்கு தனியான சட்ட நடவடிக்கைகளை தொடங்க யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது. யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு வேறு எந்த சட்டத்தின் கீழும் கிடைக்கும் மற்ற எல்லா தீர்வுகளிலிருந்தும் கூடுதலாகவும் சுயாதீனமாகவும் இந்த தீர்வு உள்ளது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு சட்டப்பிரிவு 13(13)ன் கீழ் அழைப்பு விடுக்கப்படுகிறது. யு குரோ கேபிடல் லிமிடெட்டின் முன் எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் கடன்தாரர்கள் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை அப்புறப்படுத்துவது அல்லது கையாள்வது அல்லது விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில் (சாதாரண வணிகத்தைத் தவிர) பாதுகாப்பான சொத்துக்களை மாற்றுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது மற்றும் மேலும் மேற்கூறியவற்றை பின்பற்றாதது சட்டப்பிரிவு 29ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்புகளின் நகல் கீழே கையொப்பமிட்டவர்களிடம் உள்ளது மற்றும் கடன்தாரர்கள் விரும்பினால் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அதனை பெற்றுக் கொள்ளலாம்.

இடம்: தமிழ்நாடு
தேதி : 24.12.2024

ஒப்பம்/– **மோக்ஷி சோனி (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)**
யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்காக (authorised.officer@ugrocapital.com)

U GRO CAPITAL LIMITED
4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், எல்பிஎஸ் சாலை, குர்லா, மும்பை 400070

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 (''சட்டம்'') மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் (''விதிகள்'')கீழ்

யு குரோ கேபிடல் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான கீழே கையொப்பமிட்டவர் சட்டப்பிரிவு 13(2) மற்றும் விதி 3ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டப் பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பி, அந்தந்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு பின்வரும் கடன்தாரர்களை கேட்டுக் கொண்டார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பின் சேவையைத் தவிர்க்கிறார்கள் என்று கீழ்க்கையொப்பமிடப்பட்டவர் நம்புகிறார், எனவே விதிகளின்படி கோரிக்கை அறிவிப்பினை ஒட்டுதல் மற்றும் வெளியீடு மூலம் செயல்படுத்தப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்) பெயர்/கடன்(கள்) விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை
1. மேக்ஸ் என்ஜினியரிங் 2. இளையராஜா E 3. மேகலா M கடன் கணக்கு எண்: HCFCHEMLN00001039181	நோட்டீஸ் தேதி : 14.02.2024 மற்றும் 05-02-2024 அன்று தொகை ரூ.28,19,181/– (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து பத்தொன்பதாயிரத்து நூற்று எண்பத்தொன்று மட்டும்)

ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் : தயாரிப்பு : ஜிஎம்டி என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட். மாடல் : ஹைட்ராலிக் சுவிங் பீம் ஷியரிங் மெஷின் HSB 8X3200. தயாரிப்பு : ஜிஎம்டி என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட். மாடல் : ஹைட்ராலிக் பிரஸ் பிரேக் - HPB - 125/3200. வரி ரசீது எண்.87, 88.

கோரிக்கை அறிவிப்புகளுக்கு இணங்கி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைத் தொகையை, இந்த வெளியீடு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள், பணம் செலுத்தப்படும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி, தாமதமாக செலுத்தும் அபராதம், பவுன்ஸ் கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றுடன் செலுத்துமாறு கடன்தாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். யு குரோ கேபிடல் லிமிடெட் ஒரு பாதுகாப்பான கடனாளர் என்பதையும், கடன்தாரர்களால் பெறப்படும் கடன் வசதி என்பது யு குரோ கேபிடல் லிமிடெட்டில் கடன்தாரரால் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் என்பதையும் கடன்தாரர்(கள்) கவனித்தில் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கடன்தாரர்கள் தங்கள் பொறுப்புகளை முழுமையாகச் செலுத்தத் தவறினால், கடன்தாரர்களின் கடன் கணக்கில் நிலுவைத் தொகையை பெறுவதற்காக, சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின் கீழ் கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் தீர்வாக விற்பனை செய்வதன் மூலம் அல்லது மாற்றுவது உட்பட பாதுகாக்கப்பட்ட சொத்தை கவாதீனம் செய்ய சட்டப் பிரிவு 13(4)ன் கீழ் அனைத்து உரிமைகளையும் பயன்படுத்த யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உண்டு. விற்பனை அல்லது பரிமாற்ற உரிமையைச் செயல்படுத்துவதற்கு முன், பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை இணைக்க மற்றும்/அல்லது சீல் செய்ய யு குரோ கேபிடல் லிமிடெட் அதிகாரம் பெற்றுள்ளது. பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் விற்பனைக்குப் பிறகு, யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை ஈடுகட்ட, பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு போதுமானதாக இல்லாவிட்டால், மீதி பாக்கி தொகையை மீட்டெடுப்பதற்கு தனியான சட்ட நடவடிக்கைகளை தொடங்க யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது. யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு வேறு எந்த சட்டத்தின் கீழும் கிடைக்கும் மற்ற எல்லா தீர்வுகளிலிருந்தும் கூடுதலாகவும் சுயாதீனமாகவும் இந்த தீர்வு உள்ளது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு சட்டப்பிரிவு 13(13)ன் கீழ் அழைப்பு விடுக்கப்படுகிறது. யு குரோ கேபிடல் லிமிடெட்டின் முன் எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் கடன்தாரர்கள் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை அப்புறப்படுத்துவது அல்லது கையாள்வது அல்லது விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில் (சாதாரண வணிகத்தைத் தவிர) பாதுகாப்பான சொத்துக்களை மாற்றுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது மற்றும் மேலும் மேற்கூறியவற்றை பின்பற்றாதது சட்டப்பிரிவு 29ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்புகளின் நகல் கீழே கையொப்பமிட்டவர்களிடம் உள்ளது மற்றும் கடன்தாரர்கள் விரும்பினால் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அதனை பெற்றுக் கொள்ளலாம்.

இடம்: சென்னை
தேதி : 24.12.2024

ஒப்பம்/– **மோக்ஷி சோனி (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)**
யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்காக (authorised.officer@ugrocapital.com)

கோடாக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் — ஆன்லைன் இ-ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27வுKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி